[7th March 1964

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இதற்காக சட்டம் கொண்டு வரப்போவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இருந்தாலும் கொள்கை அளவிலாவது இம் மாதிரி ஒரு விதி இருக்கவேண்டும் என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் கொள்கை அளவு ஒன்றும் இல்லை. காங்கிரஸ் கட்சி இதைப்பற்றிக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்.

* 178 கேள்வி.—**திரு. மு. பொ. வடிவேல் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

பஞ்சாயத்து யூனியன் தலைவர்களில் சிலர் சட்டசபை அங்கத் தினராகவும் இருப்பதால் சட்டசபைக் கூட்டம் நடக்கும்போது தலைவர், தலைமை இடத்தில் இல்லாத காரணத்தால் அவரின் கையொப்பம் பெறமுடியாத நிலையில் சில வேலைகள் தடைபடுவ தால் தலைவரின் எழுத்தரை அந்தக் காலங்களில் மட்டும் சென்னைக்கு அனுப்பி அவசரக் கடிதங்களைத் தலைவர் பார்வையிட அனுமதி தர விதிகளைத் திருத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அத்தகைய உத்தேசம் எதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

Sri C. Chiranjeevulu Naidu : Will the Government consider the desirability of so amending the Act as to prohibit M.L.As from contesting as chairmen of panchayat union councils and presidents of panchayats?

The Hon. Sri S. M. A. Majid : No, Sir.

Village Courts

* 179 *Q.*—Sri R. S. Veerappa Chettiar : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are aware of the difficulties and hardships of the public in view of the fact that Village Courts do not function ; and

(*b*) if so, whether there is any proposal to vest powers in the Village Headmen as per the Panchayats Act, 1958?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) ஆம்.

(இ) அத்தகைய உத்தேசம் எதுவும் இல்லை.

7th March 1964]

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : 1958-ம் வருடத்திய பஞ்சாயத்து சட்டத்தில் இந்த வில்லேஜ் கோர்ட்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தை அதிகரிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இது அமலுக்கு வரவில்லை. இவ்விதம் அதிகாரம் கொடுத்தால்தான் கிராமத்திலுள்ள ஏழை மக்கள் தங்கள் வழக்குகளைப் போடுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதைப்பற்றி தனியாகக் கேட்டால் பதில் சொல்லலாம்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பழைய பஞ்சாயத்து சட்டப்படி பஞ்சாயத்துக்களுக்கு வழக்குகளை விசாரிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது அது அமலில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இப்போது இந்த விஷயத்தில் அரசாங்கத்தின் கொள்கை மாறிவிட்டதா? அல்லது பஞ்சாயத்துக்களே இதை விசாரிக்கலாம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்கிறதா? அப்படியென்றால் இதை எப்போது நிறைவேற்றும்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஸார், பஞ்சாயத்து யூனியன் வந்த பிறகு ஒரு சில மாறுதல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. வேறு சில விவரங்களுக்கும் ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் கிடைத்த பின்னர் தான் முடிவு செய்யப்படும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கள் வழக்குகளை விசாரிக்கலாம் என்று இருந்தது. அந்தக் கொள்கையை இப்போது அரசாங்கம் கைவிட்டு விட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதெல்லாம் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. நாராயணன் : தலைவர் அவர்களே, இப்போது இந்த மாதிரி சிவில் வழக்குகளைக் கிராமப் பஞ்சாயத்துகள் நடத்தலாம் என்று இருந்து வந்ததனை கிராம முன்சீப்களிடம் ஒப்படைத்து விசாரிக்கலாம் என்று உத்தரவு போட்டிருக்கிறது. ஆனால் சட்டத்தில் கிராம முன்சீப் தனியாக விசாரிக்க முடியாது என்று கிராம ஆக்டில் இருக்கிறது. இதன் காரணமாக இப்போது பெருவாரியாக ஏழை மக்கள் இந்த வழக்குகளின் வசதியை பயன்படுத்திக்கொள்ள முடியாமல், தங்கள் வழக்குகளைத் தொடர முடியாமலும் இருக்கிறார்கள். ஆகவே சட்டப்படி இதற்கான பஞ்சாயத்து கோர்ட் எப்போது அமைக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதைப்பற்றி கூடுதல் விவரங்கள் அறிய வேண்டுமானால், கனம் அங்கத்தினர் அவர்கள் நமது முதல் அமைச்சர் அவர்களுக்கும், லா-மினிஸ்டர் அவர்களுக்கும் தனியாகக் கேள்வி போட வேண்டும். 9-00 a.m.

[7th March 1964

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, வில்லேஜ் கோர்ட்ஸுக்கு பவர் கொடுக்கவேண்டுமென்று சட்டம் மாநிலத்தில் இருக்கிறதா? அந்தச் சட்டத்தின் கதி என்ன ஆகியது?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதைப் பற்றி கனம் சட்ட அமைச்சருக்கு தனிக் கேள்வி போடலாம்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நம் உணவு அமைச்சர் முதல் அமைச்சரைப் பார்க்கிறார்கள். நான் முதல் அமைச்சரைக் கேட்கிறேன். வழக்கு மன்றங்களுக்குச் செல்வதற்குப் பதிலாக பண அளவில் ஜுரிஸ்டிக்ஷனைப் பஞ்சாயத்து யூனியனுக்கு கொடுப்பது சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது அரசாங்கத்தின் கொள்கையாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தக் கொள்கை இப்போது மாறியிருக்கிறதா? அதை அமலுக்குக் கொண்டு வர அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது உள்ள சட்டத்தில் அம்மாதிரி ஒப்புக்கொள்ளப்படவில்லை என்று கூறுவேன். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுப்பது சரியல்ல என்பது என்னுடைய கருத்து. அரசாங்கத்தின் கருத்தும் அதுதான்.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, 50 ரூபாய்க்கு மேற்பட்ட தொகையாக இருந்தால் தான் முன்சீப் கோர்ட்டில் போடலாம். அதற்குக் குறைந்து இருந்தால் பஞ்சாயத்து கோர்ட்டில்தான் போட வேண்டும். இப்போது பஞ்சாயத்து கோர்ட்டும் கிடையாது. எந்தக் கோர்ட்டுக்கு அவர்கள் செல்ல வேண்டும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது கிராம முன்சீப் கோர்ட்டுக்கு அந்த ஜுரிஸ்டிக்ஷன் இருக்கிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் கிராம முன்சீப் கோர்ட்டுக்கு பவர் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். இப்போது ஏழை மக்கள் சூட்களைப் போட டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்குப் போகவேண்டியிருப்பதால் மிகவும் செலவு ஏற்படுகிறது. ஆகையால், கிராம முன்சீப்களுக்கு பவர் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? அல்லது பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை நிறுவ அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா?

கனம் திரு. எம். பக்வத்சலம் : இப்போதைய சட்டப்படி பஞ்சாயத்துக்கு இந்த அதிகாரம் இல்லை. இந்த அதிகாரத்தைக் கிராம முன்சீப்புக்குக் கொடுப்பது என்று இப்போது இருக்கிறது.

Teachers' Constituencies in the Legislative Council

* 180 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are in favour of abolishing Teachers' Constituencies in the Legislative Council;